# புனித யோசேப்பு பெருவிழா (மார்ச் 19)

## திருப்பலி முன்னுரை

புனித யோசேப்பு தாவீதின் வழிமரபிலே, யாக்கோபின் மகனாக யூதேயா நாட்டில் பிறந்தவர். இவர் இளமை முதலே நேர்மையோடும், கீழ்ப்படிதலோடும், பக்தியோடும் கடவுளின் பிள்ளையாக வாழ்ந்தவர். நற்செய்தியாளர் மத்தேயு இவரை 'நேர்மையாளர்" என்று அழைக்கிறார். இவரது தொழில் தச்சுவேலை செய்வதாகும். இவர் ஒரு கடின உழைப்பாளி. 1955ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் இவரை 'தொழிலாளர்களின் பாதுகாவலர்" என்று பிரகடணப்படுத்தினார். இறைவனின் மீட்புத் திட்டத்திலே இறைவனுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து இயேசுவை தம் கரங்களிலும், தோள்களிலும் சுமந்தவர். இறைமகனை 'இயேசு" என்று பெயரிட்டு அழைத்தவர். இவர் திருமணத்திற்கு முன்பாக, மரியா கருவுற்றிருப்பது யோசேப்புக்கு தெரிய வந்ததும் அவரைக் கல்லால் எறிந்து கொல்ல முற்படவில்லை. மாறாகப் பெருந்தன்மையோடு அவரை யாருக்கும் தெரியாமல் விளக்கிவிட நினைக்கின்றார்.

பின்னர், கடவுளின் தூதர் அவருக்கு எல்லாவற்றையும் கனவில் வெளிப்படுத்திய பிறகு மரியாவை தன்னுடைய மனைவியாக யோசேப்பு ஏற்றுக் கொள்கிறார். மரியா பேறுகால வேதனையுற்ற நேரத்திலும் துணையாக இருந்து காத்தவர். ஏரோதுக்குப் பயந்து எகிப்துக்கு சென்றபொழுது கூடவே இருந்துக் காத்தார். பொறுப்பான நல்ல குடும்பத்தலைவராக வாழ்ந்தார். இவரே நம் அனைவருக்கும் அனைத்துக் குடும்பங்களுக்கும் முன்மாதிரி. இறைவனின் மீட்புத்திட்டத்தில் முழு ஒத்துழைப்புக் கொடுத்த புனித யோசேப்பை 1870ஆம் ஆண்டில் திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் 'திருஅவையின் பாதுகாவலர்" என்று பிரகடணப்படுத்தினார். இவர் கற்புக்கும், நல்ல படிப்புக்கும், இறப்புக்கும் பாதுகாவலர்.

நமது புனிதரிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்னவென்றால், கீழ்ப்படியக் கற்றுக்கொள்வது, அமைதிக் காக்க கற்றுக்கொள்வது. நமது வாழ்வில் நாம் சந்திப்பவர்களை அவரவர்களின் குறை, நிறைகளோடு ஏற்றுக் கொண்டும் அதற்காக எவ்வித துன்பங்கள் வந்தாலும் அதனை துணிவோடு ஏற்று வாழக் கற்றுக்கொள்வோம். நல்லதொரு குடும்பம் உருவாகிட புனிதரிடம் இத்திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எங்கள் காவலராம் தூசை தந்தையின் கரத்தில் வளர்ந்தவரே எம் இறைவா, திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் நேர்மையை நெறிமுறையாய் ஏற்று எளியவராகவும், கடின உழைப்பாளிகளாகவும் இறைப்பக்தி மிக்கவர்களாகவும், இரக்கம் நிறைந்தவர்களாகவும் வாழத்தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நாட்டையாளும் வேந்தரே இறைவா, உலக நாடுகள் தங்கள் நாட்டின் இறையாண்மையை மதிக்கவும், ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் நட்புறவு கொண்டு உலக அமைதிக்காக உழைத்திடவும், இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் சீரழிவுகளிலிருந்து மக்களை பாதுகாக்க அருள்வேண்டி புனித யோசேப்பு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. வன்முறையற்ற அகிம்சை வழியைக் கற்பித்த இறைவா, எங்கள் நாட்டிலும், குடும்பத்திலும், வன்முறைகளால் ஒற்றுமை, சமாதானம் சிதைக்கப்பட்டு பழிவாங்கும் தன்மை அதிகரித்துள்ளதால், குடும்பங்கள் சீர்கெட்டுப்போகிறது. இந்நிலை மாறி நாசரேத் குடும்பம்போல் புனித யோசேப்பு வழிநடத்திய அடிச்சுவட்டில் நாமும் வாழத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. நற்பேறுபெற்ற புனித யோசேப்பின் திருக்கரங்களில் வளர்ந்த இறைவா, இவ்வுலக வாழ்வின் பயணப் பாதையில் வாழும் ஏழைகள், கைவிடப்பட்டோர், பசி, பிணி, வறுமை, பஞ்சத்தால் வாடுபவர்கள், சண்டைச்சச்சரவு, கருத்து வேறுபாடு, போராட்டம் போன்ற பல இன்னல்களை நீக்கி உமது கனிவான பார்வையினால் இவர்களை நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. வாழ்வின் வள்ளலே இறைவா, எங்கள் குடும்ப வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற பிரச்சனைகள் மற்றும் நெருக்கடிகளுக்கு, புனித யோசேப்பைப் போன்று உமது உதவியால் விவேகமுள்ள தீர்வு காண உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

6. மீட்பின் நாயகரே இறைவா, எங்கள் நாட்டையும் மக்களையும் வழிநடத்தும் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள், அனைத்து சூழ்நிலைகளிலும் புனித யோசேப்பைப் போன்று நேரிய மனம் கொண்டவர்களாய் வாழ உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

7. மாட்சியின் மகுடமே இறைவா, உம்மால் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அனைவரையும் அன்புடனும், அக்கறையுடனும், பராமரிக்கவும், அதனால் ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன் சகிக்கவும் நல்ல மனதை வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.